**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**OS.192/2023**

நாள்.18.02.2026

**வா.சா.1. 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

கோவிந்தராஜ் அவர்களுக்கு நான் வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் வாங்கி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. கோவிந்தராஜ் எந்த ஆண்டில் இறந்து போனார் என்றால் 16.10.2000-ல். இறந்து போன கோவிந்தராஜீக்கு 17.08.2012-ல் வாரிசு சான்றிதழ் திருத்துறைப்பூண்டி, வட்டாட்சியர் அலுவலரால் வழங்கப்பட்டதா என்றால் வாரிசு சான்றிதழ் கொடுத்த விவரம் எனக்கு தற்போது தான் தெரிய வந்தது. அந்த வாரிசு சான்றிதழில் யார் யார் பெயர்கள் உள்ளது என்றால் இந்த வழக்கில் 5, 6, 7 ம் பிரதிவாதிகள் பெயர்கள் மட்டும் உள்ளது. நான் திருத்துறைப்பூண்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.76/2024 என்ற வழக்கினை இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.76/2024 என்ற வழக்கில் நீதிமன்றத்திலிருந்து சார்வான வழக்குரையின் நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். நான் அசல் வழக்கு எண்.76/2024 என்ற வழக்கில் கோவிந்தராஜீக்காக கொடுக்கப்பட்ட வாரிசு சான்றிதழை தவறு என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் நாங்கள் வட்டாட்சியர் மற்றும் அரசு மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இது நாள் வரையில் இறந்து போன கோவிந்தராஜீக்கு நான் சட்டப்பூர்வமான வாரிசு என சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று சொன்னால் வாரிசு சான்றிதழில் என் பெயரை

சேர்க்காததால் அ.வ.எண்.76/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் நாளது தேதி வரை இறந்து போன கோவிந்தராஜ் என்பவருக்கு சட்டப்படியான வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் நீதிமன்றம் மூலமாகவோ அல்லது வட்டாட்சியர் மூலமாகவோ பெற்று தாக்கல் செய்யாததால் அசல் வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், அசல் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் அசல் வழக்கில் பூர்வீக சொத்தில் பாகம் கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பூர்வீக சொத்து மற்றும் எனது தந்தைக்கு சொந்தமான சொத்துக்களில் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொத்து விவரத்தில் உள்ள சொத்துக்கள் எந்தெந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், எந்தெந்த சொத்துக்கள் என் தந்தைக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லியுள்ளேன். எனது தந்தை அவருக்கு சொந்தமான சொத்தில் எனக்கு 3.1/2 மா நிலத்தை எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் ஞாபகமில்லை. 1986ம் ஆண்டு திருத்துறைப்பூண்டி, சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.814/1986 என்ற பதிவு ஆவணத்தை எனக்கு ஏற்படுத்தி கொடுத்த சொத்தை தான் வடசங்கேந்தி கிராமத்தை சேர்ந்த சபாபதி தேவர் மகன் முருகேசன் என்பவரிடம் 17.04.2013-ல் கிரய சாசனம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எனக்கு கிடைக்க வேண்டிய பாகத்தை பெற்றுக்கொண்டு அதனை முருகேசன் என்பவரிடம் விற்பனை செய்துவிட்டு

தற்போது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றும், அதனடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. கோவிந்தராஜீனுடைய மற்ற வாரிசுகளுக்கு எனக்கு கிடைத்தது போல் சொத்துக்கள் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டு அவரவர்கள் அனுபவம் எடுக்கப்பட்டுவிட்டது. அந்த விவரம் எனக்கு நன்கு தெரிந்து பாகம் கேட்டு மீண்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அசல் வழக்கில் நான் கோரும் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இராமமிர்தம் குடியிருந்து வரும் வீடு சம்பந்தமாக வைரம், சுப்பையன் ஆகிய இருவரும் பேசி வீட்டை காலி செய்து கொடுப்பதற்காக ரூ.35,000/- பணம் பெற்றுக்கொண்டு வீட்டை காலி செய்து கொண்டு சென்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருத்துறைப்பூண்டி, வட்ட சட்ட பணிகள் குழுவில் கோவிந்தராஜ், வைரம் மற்றும் சுப்பையன் அவர்களுக்கிடையில் மனு கொடுத்து சமாதானமாக பேசி முடிவு செய்து தான் வைரம், சுப்பையன் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வைரமும், இராமமிர்தமும் அவர்களுக்கு கிடைத்த சொத்துக்களை பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமமிர்தத்திற்கு கிடைத்த சொத்துக்களை 6ம் பிரதிவாதி சித்ராவிற்கும், 7ம் பிரதிவாதி காமராஜிற்கும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமமிர்தம் சொத்துக்கள் எழுதி கொடுத்தது பொறுத்து எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. இராமமிர்தம், சித்ராவிற்கு

எழுதிக்கொடுத்த சொத்துக்களில் மட்டும் தான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எதுவும் தெரியாது. இராமமிர்தத்திற்கு கிடைத்த சொத்துக்களை தான் அவரது மகன் மற்றும் மகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7ம் பிரதிவாதியும், நானும் மிக நெருக்கமாக இருப்பதால் 7ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காமல் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் 7ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 7ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும், ஆனால் வேண்டும் என்றே 7ம் பிரதிவாதிக்கு ஆதரவாக இந்த வழக்கில் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை விட்டு விட்டு பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளது எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு போட்ட சொத்துக்களை நான் நேரில் பார்வையிட்டு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் நேரில் பார்வையிடவில்லை. எனக்கு கோவிந்தராஜ் மற்றும் அவரது பூர்வீக சொத்துக்கள் மொத்தம் எவ்வளவு உள்ளது என்பது பற்றி எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அதில் ஒரு பகுதிக்கு மட்டும் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான், கோவிந்தராஜீனுடைய சட்டப்பூர்வ வாரிசு என நிரூபிக்காத நிலையில்

நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றும், அசல் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் இதே பிரதிவாதிகளுக்கு எதிராகவும், இதே சொத்து விவரங்களை காட்டியும் இரண்டு நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி நிலை நிற்கக்கூடியது அல்ல என்பதால் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**9, 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.